செ.வெ.எண் - 66 நாள்-19.02.2020

# அரியலூர் மாவட்டத்தில் பெண்குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு விழாவில் சாதனையாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆடசித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டம், வாலாஜநகரம் **IMA** மஹாலில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பல்திறன் சாதனையாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் பெண் கல்வியை ஊக்கப்படுத்தவும், பெண்கள் பாதுகாப்பிலும் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. பெண் குழந்தைகளின் நலனுக்காக அரசு பல்வேறு சிறப்பு அம்சங்களை செயல்படுத்தி வருகிறது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுட்டிக்காட்டப்பட்ட நிலவரத்தைத் தொடர்ந்து, பெண் குழந்தைகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க, மத்திய அரசு நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலிருந்தும், பெண் குழந்தைகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வரும் 100 மாவட்டங்களை தேர்ந்தெடுத்து பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளை கற்பிப்போம் என்ற புதிய திட்டத்தினை அறிவித்தது. 2014-15ஆம் ஆண்டில் ரூ.100 கோடி செலவில் மத்திய அரசு துவக்கியது.

இத்திட்டம் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. சுகாதாரத்துறை, மனிதவள மேம்பாட்டுத்துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகங்களின் கூட்டு முயற்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்போது பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் நடைமுறைபடுத்தப்பட்டு வரும் சட்டங்களையும், நலத்திட்டங்களையும் குறித்த விழிப்புணர்வை பரவலாக்கி, பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டங்களின் நோக்கம் பாலினபாகுபாடு அடிப்படையில் குழந்தைகளின் பாலினம் அறிந்து கொள்ளப்படுவதை தடுத்தல், பெண் குழந்தைகள் உயிர் வாழ்வதையும், அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல், பெண் குழந்தைகளின் கல்வியினை மேம்படுத்துதல், குடும்ப கட்டுப்பாட்டை ஊக்குவித்தல் போன்றவையாகும். நமது மாவட்டத்தில் 2019-20ஆம் ஆண்டின் பெண் குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கை 4495 ஆகும். 2019- 20 ஆம் ஆண்டின் 2 பெண் குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கை 2298 ஆகும். மேலும், அரியலூர் மாவட்டத்தில் 2018-19ஆம் ஆண்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 917 பெண் குழந்தைகள் என விகிதாசாரம் இருந்தது, 2019- 20ஆம் ஆண்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 961 பெண் குழந்தைகள் ஆக உள்ளது. இன்று (19.02.2020) நடைபெறும் இவ்விழாவில் சாதனை புரிந்த 60 பெண் குழந்தைகளுக்கு சான்றிதழ்களும், ஊக்க பரிசுகளும் வழங்கப்படுகிறது. பெண் குழந்தைகளின் தன்னம்பிக்கையை அதிகப்படுத்தவும் அவர்களை ஊக்குவிக்கபடுகிற விதமாகவும் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்படுகிறது.

உங்களுக்கும், உங்கள் உறவினர்களுக்கும் பெண் குழந்தை பிறந்தால் அதனை மகிழ்ச்சியாக கொண்டாடுங்கள். உங்கள் வீட்டு பெண் குழந்தைகளை பிறர் வீட்டிற்கு செல்லும் உடமைகளாக கருதும் மனபாங்கை கைவிட்டு பெண் குழந்தைகளை பெருமையாக கருதுங்கள். உங்கள் வீட்டு ஆண் குழந்தைகளுக்கு நிகராக, பெண் குழந்தைகளுக்கும் உணவு, கல்வி, விளையாட்டு இவை அனைத்திலும் சம வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள். ஆண் குழந்தைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் போல பெண் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும். உங்கள் குடும்பங்களில் நடைபெறும் திருமணங்களை வரதட்சனையின்றி எளிமையான முறையில் நடத்துங்கள். உங்கள் குடும்ப சொத்துக்களில் பெண் குழந்தைகளின் உரிமையை உணர்ந்து அவர்களுக்கும் பயன் கிடைக்க செய்யுங்கள். ஜனவரி 24ம் தேதியினை அரசு தேசிய பெண் குழந்தைகள் தினமாக அறிவித்துள்ளது. அதனை தொடர்ந்து பிரதி மாதம் உங்கள் குடியிருப்பிற்கு அருகாமையில் உள்ள அங்கன்வாடி மையங்களில் நடைபெறும் பெண் குழந்தைகள் தின கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுங்கள். உங்கள் ஊராட்சியில் பாலின தேர்வு பரிசோதனையில் ஈடுபடுவோரை கண்டறிந்து உள்ளூர் சுகாதார குழுவினருக்கு தெரியபடுத்துங்கள். உங்கள் சுற்று வட்டாரம் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பானதாக இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். உங்கள் ஊராட்சியில் நடைபெறும் குழந்தை திருமணங்களை தடுக்கவும், பெண்கல்வியை ஊக்குவிக்கவும் உதவி செய்யுங்கள். பெண் குழந்தைகளுக்கு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் அவர்கள் பயன்பெற, பெற்றோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட கழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் வசந்தகுமார், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முத்துகிருஷ்ணன், துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.ஹேமசந்த் காந்தி, மாவட்ட சமூக நல அலுவலர் அன்புகுளோரியா, மாவட்ட திட்ட அலுவலர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சாவித்ரி, நன்னடத்தை அலுவலர் அருள்தாஸ், காவல் ஆய்வாளர் குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு சுமதி, பாதுகாப்பு அலுவலர் செல்வராஜ், மற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**